| **அனுப்புநர்** | **பெறுநர்** |
|---|---|
| திருமதி க.சசிகலா,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>அரசுத் தேர்வுகள் இயக்ககம்,<br>சென்னை – 600006. | 1. இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி<br>2. முதன்மைக் கல்வி அலுவலர்கள்,<br>அனைத்து மாவட்டங்கள் |

**ந.க.எண். 018677 / எச்1 / 2025** **நாள் : 12.06.2026**

ஐயா/அம்மையீர்,

**பொருள் :** மேல்நிலை பொதுத்தேர்வு மார்ச் 2026 - விடைத்தாட்களின் நகலினை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளல் மற்றும் மறுகூட்டல் / மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பித்தல் — சார்பு.

**பார்வை:** 1. இவ்வலுவலக செய்திக்குறிப்பு நாள்.11.06.2026.

2. .

------

மார்ச் 2026 மேல்நிலைப் பொதுத் தேர்வுக்கான விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பித்த மாணவர்கள் 05.06.2026 (**வெள்ளிக்கிழமை**) **பிற்பகல் முதல்** 16.06.2026 (**செவ்வாய்க்கிழமை**) **வரை** விடைத்தாள் நகலினை பாடவாரியாக பல்வேறு கட்டங்களாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டிருந்தது. விடைத்தாள் நகல்களை பதிவிறக்கம் செய்த பின்னர் மாணவர்கள் 16.06.2026 –**க்குள்** மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீட்டி விண்ணப்பிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது தேர்வர்களின் நலன் கருதி இக்கால அவகாசம் 17.06.2026 (**புதன்கிழமை**) வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

-2-

12.06.2026 முற்பகல் மேல்நிலைப் பொதுத் தேர்வுகள் சார்ந்த விடைத்தாள் நகலெடுக்கும் பணிகள் நிறைவுற்ற நிலையில் மாணவர்கள் தாங்கள் விடைத்தாள் நகலுக்கு விண்ணப்பித்திருப்பின் விடைத்தாள் நகலினை பதிவிறக்கம் செய்து, தேவைப்படின் மறுமதிப்பீடு/மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்கவேண்டும்.

மேற்காண் விவரத்தினை இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி/ அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்களை சார்ந்த அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கும் தெரிவித்து, அனைத்து பள்ளிகளிலும் விடைத்தாள் நகலுக்கு விண்ணப்பித்திருந்த மாணவர்கள் விடைத்தாள் நகலினை பதிவிறக்கம் செய்ததை உறுதிபடுத்துமாறும், தேவை இருப்பின் மேற்குறிப்பிட்டுள்ள தேதிக்குள் மறுமதிப்பீடு/ மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்க அறிவுறுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/-

இயக்குநர்

நகல்:

அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் - மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் வழியாக